REGD. NO. M. 6511 ★ தனி இதழ் 0—1—0 ★ இலங்கையில் 10 சதம் ★ PHONE : 85630

நம் நாடு

தி. மு. க. தின இதழ் — ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

The "Nam Nadu" A Tamil Daily. ★ The Official Organ Of The D.P.F.

'நம் நாடு'
புதிய சந்தா விகிதம்
[ஏப்ரல் முதல் தேதியிலிருந்து]
★
மூன்று மாதம் ... ... ரூ. 6
ஆறு மாதம் ... ... ரூ. 12
ஒரு வருடம் ... ... ரூ. 24
தனி இதழ் 7 நயா பைசா
இலங்கையில் 10 சதம்

மலர் 4] சென்னை : பங்குனி 15௳ வியாழன் (28—3—57) ★ ★ வெளியூர்: பங்குனி 16௳ வெள்ளி (29—3—57) [இதழ் 248

தமிழர் கண்ணீரும் இந்திய--இலங்கை நட்பும் ஒன்றேதானும்!

தமிழர் நலம் பேண வேறு முறைகளை மேற்கொள்ள முடியாதாம்!

அது அறிவுடைமையும் அல்லவாம்! அரச தந்திரமும் அல்லவாம்!

மக்கள் சபையில் வி. கே. கிருஷ்ணமேனன் துடுக்குப் பேச்சு

"இலங்கையில் வாழும் இந்தியர்கள் (தமிழ் மக்கள்) குறித்து தொடர்ந்து பேச்சுவார்த்தை நடத்தப்பட்டுள்ளது; இப்பொழுதும் கூட சில வகையான பரிகாரமுறைகள் தேடப்பட்டுவருகின்றன.

"எவ்வளவுதான், இலங்கையில் இருந்துவரும் இந்தியப் பரம்பரையினர் அல்லது இந்திய குடிமக்களின் (தமிழ் மக்கள்) பிரச்சினை இந்தியாவிற்கு முக்கியமானதாக இருந்தபோதிலும், தமக்குள்ள வேறு பல முக்கிய பணிகளுக்கிடையில் இப்பிரச்சினை குறித்து இந்தியப் பிரதமர் பல ஆண்டுகளாக கலந்து பேசி வந்தபோதிலும், **'கூடுதலான முக்கியத்துவம் வாய்ந்ததாக இல்லையானுலும், இலங்கையின் நட்பு ஒத்த முக்கியத்துவம் வாய்ந்ததாகும்."**

—இவ்வாறு மக்கள் சபையில், இலங்கைவாழ் தமிழ் மக்கள் சிந்தும் கண்ணீரையும், இலங்கை—இந்திய உறவையும் ஒப்ப வைத்துப் பேசி உள்ளார், வி. கே. கிருஷ்ணமேனன்.

"நமக்கு அடுத்துள்ள நாடாகும் இலங்கை. சிக்கலைத் தீர்க்க, மேற்கொள்ளப்பட்டு வரும் முறையைத் தவிர்த்து வேறு பாதையைப் பின்பற்ற முனைவது அறிவுடைமையுமாகாது; அரச தந்திரமுமாகாது" என்றும் அவர் கூறியுள்ளார்.

உதகையில் 'உல்லாச உலா' வர நிதி அமைச்சர் பேராவல்!

கோடையில் சட்டசபைக் கூட்டங்களை நடத்த ஏற்பாடு!

அரசாங்க அலுவலகங்களும் இடம் பெயருமாம்!

கோடை காலத்தில் சர்க்கார் காரியாலயத்தின் ஒருபகுதியை உதகைக்கு மாற்றும் எண்ணத்தை அரசினர் ஆராய்வதாகவும், புது அமைச்சரவை அமைந்தவுடன் இதுபற்றிக்கவனிக்சப்படும் என்றும், 1958-ம் ஆண்டு கோடை காலத்தில் சென்னை சட்டமன்றம், மற்றும் கவுன்சில் கூட்டங்கள் உதகையில் நடைபெறும் என்றும், பல காரணங்களால் இந்த ஆண்டு நடைபெறும் கூட்டங்கள் உதகையில் நடைபெற முடியவில்லையென்றும், உதக மண்டலத்தை எல்லா நாடுகளுக்கும் முக்கியத்துவம் வாய்ந்த ஓர் உல்லாச இடமாக மாற்ற அரசியலார் உறுதிபடுத்தியுள்ளனர் என்றும், அடுத்துவரும் அமைசசரவை நீலகிரி மாவட்ட முன்னேற்றத்தில் அதிக அக்கரை கொள்ளுமென்றும் நிதிஅமைச்சர் சி. சுப்பிரமணியம் உதகை கூட்டமொன்றில் கூறியிருக்கிருர்.

சட்டசபை எதிர்க்கட்சித் தலைவர் இராமமூர்த்தி அய்யர் தோல்வி

நாகப்பட்டினம் பாராளுமன்றப் பொதுத் தொகுதிக்குப் போட்டியிட்ட கம்யூனிஸ்டுக் கட்சியின் பொலிட்பீரோ உறுப்பினரும், சென்னை மாநில சட்ட மன்ற எதிர்க் கட்சித் தலைவருமான தோழர் இராமமூர்த்தி (அய்யர்) அவர்கள், காங்கிரஸ் அபேட்சகரைவிட 1,28,070 வாக்குகள் குறைவாகப் பெற்று தோல்வியுற்ருர். அதேபோல தனித் தொகுதிக்குப் போட்டியிட்ட கம்யூனிஸ்டுத் தோழர் ஏ. கே. சுப்பையாவும் தோல்வியடைந்தார்.

பொதுத் தொகுதியில் காங்கிரஸ் அபேட்சகர் 2,52,275 வாக்குகளும், பி. இராமமூர்த்தி (கம்) 1,24,205 வாக்குகளும், கி. மனோகரன் (தி. மு. க.) 78,983 வாக்குகளும், எஸ். எம். ஆர். ஆறுமுகம்பிள்ளை (சுயே) 57,507 வாக்குகளும் பெற்றனர்.

தனித் தொகுதியில் காங்கிரஸ் அபேட்சகர் 2,16,890 வாக்குகளும், ஏ. கே. சுப்பையா (கம்) 1,51,704 வாக்குகளும், வி. வீராசாமி (சுயே) 54,597 வாக்குகளும் பெற்றனர். செல்லாத வாக்குகள் 38,443.

பொதுத் தொகுதியில் சுயேச்சை அபேட்சகர் ஆறுமுகம் பிள்ளையும், தனித் தொகுதியில் சுயேச்சை அபேட்சகர் வீராசாமியும் ஜாமீன் தொகை இழந்தனர்.

சென்னை மாநிலத்தில் டில்லி பாராளுமன்றஅபேட்சகர்களாகப் போட்டியிட்ட 3 கம்யூனிஸ்டுகள் உட்பட 48 பேர்கள் ஜாமீன் தொகை இழந்தனர்.

சென்னை மாநிலத்தில் பாராளுமன்றத்திற்கு, தேர்ந்தெடுக்கப்பட்ட கட்சிகள் விவரம் :— தி. மு. க. 2; கா. சீ. கா. 2; சோஷலிஸ்டு 1; பார்வர்ட்பிளாக் 1; சுயேச்சைகள் 2; கம்யூனிஸ்டு 2; காங்கிரஸ் 31—ஆக மொத்தம் 41 இடங்களாகும்.

இரண்டாவது கப்பல் கட்டும் தளம் தூத்துக்குடியில் அமையுமா?

நிபுணர்களின் கருத்து தெரிந்த பின்புதான் இடம் பற்றித் தீர்மானிக்கப்படுமாம்

வட நாடுகளிலும் கண்ணேட்டம் செலுத்தப்படுகிறது

புதுடில்லி, மார்ச் 27—

இந்தியாவில் இரண்டாவது கப்பல் கட்டும் தளத்தை எங்கே அமைப்பது என்பது சம்பந்தமாக டில்லிப் பேரரசு தற்போது யோசித்துவருகிறதாம். தூத்துக்குடி, கொச்சி, கார்வார், பட்கல், கண்டலா ஆகிய இடங்களில் எதாவது ஒரு இடத்தில் கப்பல் கட்டும் தளத்தை எற்படுத்தலாம் என்று யோசிக்கப்படுகிறதாம்!

இத்தகவலை மக்கள்சபையில் உற்பத்தி இலாகா அமைச்சர் தெரிவித்துள்ளார்.

கப்பல் கட்டும் தள ஆலோசகர்களின் கருத்துக்களைக் கேட்டுத் தெரிந்துகொண்ட பின்னர்தான் எந்த இடம் என்பது இறுதியாகத் தீர்மானிக்கப்படுமென்றும், இரண்டாவது கப்பல் கட்டும் தளத்தை அமைப்பதென்று இந்திய சர்க்கார் தீர்மானித்துவிட்டார்கள் என்றும், இது சம்பந்தமான ஆரம்ப வேலை எற்கனவே ஆரம்பமாகிவிட்டது என்றும் அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார்.

விசாகப்பட்டிணத்தில் எற்கனவே ஒரு கப்பல் கட்டும் தளம் இருப்பது ஞாபகமிருக்கலாம்.

97,000 ஆயுத படையினர் குறைக்கப்பட்டனர்?

வார்ஸா, மார்ச் 27—

போலந்தின் ஆயுதப் படையில் 44,500 பேர் குறைக்கப்பட்டுவிட்டதாகவும், இது இரண்டாவது குறைப்பாகுமென்றும் இதுவரையில் மொத்தமாகக் குறைக்கப்பட்டவர்கள் தொகை 97,000 என்றும் கூறப்பட்டிருக்கிறது.

★★★★★★★★★★★★★★★★★★

நாளை!

★

பொதுத் தேர்தல் நிலைமை குறித்த தி. மு. கழகப் பொதுச்செயலாளர் அறிக்கை ஒன்று நாளை (29—3—57) இதழில் வெளிவரும்.

★★★★★★★★★★★★★★★★★★★

கேரளத்தில் கம்யூனிஸ்டுகள் ஆட்சி!

'குண்டுகளால் அல்ல---வாக்குச் சீட்டுகளால் ஏற்பட்டதே'

கேரள கவர்னர் கருத்து

எர்ணுகுளம், மார்ச் 27—

"கம்யூனிஸ்டுகள் அதிகாரத்திற்கு வந்துவிட்டனர் என்பதற்காக மட்டுமே கேரளம் பாரபட்சமாக நடத்தப்பட மாட்டாது. இங்கு எல்லா விவகாரங்களும் எப்பொழுதும்போல் சாதாரணமாகத்தான் இருக்கும்.

"அரசியல் சட்டத்திற்கும், அதிலுள்ள இலட்சியக் கட்டளைகளுக்கும் உட்பட்டு மாகாண அரசாங்கம் செயல்பட்டு வருகின்ற வரையில், தனது ஒத்துழைப்பை அளிக்க மத்திய அரசாங்கம் நிச்சயமாக மறுக்காது. கம்யூனிஸ்டு கட்சியும்கூட, அரசியல் சட்ட விதிகளை மீற திட்டமிட்டுக்கொண்டிருப்பதாக நான் கருதவில்லை.

இக்கருத்தை கேரள கவர்னர் டாக்டர் இராமகிருஷ்ணராவ் அறிவித்துள்ளார்.

அவர் மேலும் பின்வருமாறு கூறியுள்ளார் :—

"மத்திய அரசாங்கத்திற்கும் மாகாண ஆட்சிக்கும் இருக்க வேண்டிய உறவு மகிழ்ச்சிகரமாக ஏன் இருக்கமுடியாது என்பதற்கான காரணங்கள் எதுவும் எனக்குப் புலனுகவில்லை.

"இத்துறையில், கம்யூனிஸ்டு கட்சியினர் 'குண்டுகளால் அல்லாமல் வாக்குச் சீட்டுகள் மூலம்,' அதிகாரத்திற்கு வந்திருக்கும் அரிய வாய்ப்பினைப் பெற்றுள்ளனர்.

கவர்னர் மேலும் கூறியிருப்பதாவது:—

"கம்யூனிஸ்டுகள் பெற்றுள்ள பெரும்பான்மை குறுகியதாக இருந்தாலும், நியாயமானதாக இருப்பதற்கான வாய்ப்பு அதற்கு இருக்கக் கூடும். தங்கள் அணியில் மக்களைத் திரட்டுவது அதனுல் முடியும். பொதுமக்களிடமிருந்து எந்த அளவு அரசாங்கம் ஒத்துழைப்பைப் பெற முடிகின்றதோ அதுவேதான் நிலையானது என்பதேஎனது கருத்து."

வினுத் தாள்கள் மறைந்துவிட்டதாம்!

எஸ். எஸ். எல். சி. பரீட்சை ஒத்திவைக்கப்பட்டது

கல்கத்தா, மார்ச் 27—

மேற்கு வங்கத்தில் எப்ரல் 4-ந் தேதியிலிருந்து எஸ். எஸ். எல். சி. பரீட்சை நடைபெற எற்பாடாகியிருந்தது. மொத்தம் 75,000 பேர் இவ்வாண்டில் பரீட்சை எழுதுகிருர்கள். ஆனுல் திடீரென்று இப்போது பரீட்சைகள் ஒத்திவைக்கப்பட்டுவிட்டன; எப்போது நடைபெறும் என்பது பின்னர் அறிவிக்கப்படுமாம்.

இதற்கு முக்கியக் காரணம், மேற்கு வங்கத்தில் ஒரு வெளியூர் அஞ்சல் நிலயத்திலிருந்து எல்லாப் பாடங்களுக்குமான கேள்வித் தாள்கள் அடங்கிய இன்ஷ்யூர் செய்யப்பட்ட பார்சல் காணுமற்போனதுதான் என்று தெரியவருகிறது.

போலீசாரின் புலன் விசாரணை ஆரம்பமாகிவிட்டதாம்.

நம் நாடு

சென்னை 28—3—57 வியாழன்

சேலத்திலா, கோவையிலா?

சேலம் மாவட்ட மலைச்சாரலில் கிடைக்கப்பெறும் இரும்புக் கனிப்பொருளைப் பயன்படுத்தி மக்களுக்குப் பயன்படச் செய்வதற்கு, அப்பகுதியிலேயே உருக்குத் தொழிற்சாலை ஒன்றை நிர்மாணிக்க வேண்டும் என்ற கோரிக்கை சென்ற கால் நூற்றாண்டுக் காலமாக இருந்துவருகிறது. அக்கோரிக்கையை ஆங்கில துரைத்தனம் அதன் இயல்புப்படி அலட்சியப்படுத்திவந்தது.

ஆங்கிலேயர் அகன்ற பிறகு, சேலம் மாவட்ட மக்களின் கோரிக்கைக்கு விமோசனம் ஏற்படக்கூடும் என்று எதிர்பார்க்கப்பட்டது. மக்களின் கோரிக்கைக்கு ஆங்கில துரைத்தனத்திடமிருந்து கிடைத்த அதே அலட்சியந்தான், நம்மவர் ஆட்சியென்று பெருமையாக அழைக்கப்படும் இந்தியப் பேரரசிடமிருந்தும் பரிசாகக் கிடைத்தது.

சேலம் மக்களின் கோரிக்கையை அலட்சியப்படுத்திவந்த அதே நேரத்தில், ரூர்கேலா, பிலாய், துர்காபூர் போன்ற இடங்களில் பெரும் பெரும் உருக்குத் தொழிற்சாலைகளைப் புதிதாக நிர்மாணிக்கும் பணியில் இந்தியப் பேரரசு தீவிரமாக ஈடுபடலாயிற்று. அவைகளுக்காகக் கோடிக்கணக்கில் பணமும் ஒதுக்கியுள்ளது அப்பேரரசு.

அதுவுமன்றி, சாம்செட்பூரில் தனி நபரால் நடத்தப்பட்டுவரும் உருக்குத் தொழிற்சாலையை விரிவாக்கும் ஏற்பாடும் மேற்கொள்ளப்பட்டது. அவ்வாறு விரிவாக்கப்படுவதை அனுமதித்ததுடன் இருந்துவிடாது, அத்தனி நபர் நிறுவனத்திற்குப் பெருந் தொகைக் கடனை தானேமுன்னின்று அமெரிக்காவிடமிருந்து இந்தியப் பேரரசு பெற்றும் கொடுத்திருக்கிறது.

தங்கள் நீண்டகால கோரிக்கைக் கவனிக்கப்படாததால், தென்னகத்து மக்களுக்கு ஏற்பட்ட எரிச்சல், அதே நேரத்தில் இந்தியப் பேரரசு மேற்குறிப்பிட்ட வகையில் செயல்பட்டுவருவதின் காரணமாக, மேலும் கூடுதலாயிற்று. அதன் விளைவாக, சேலம் மாவட்ட உருக்குத் தொழிற்சாலை கோரிக்கை பல மடங்கு தீவிரமாகியது.

கோரிக்கை மேலும் மேலும் வலுப்பெற்று வருவதுகண்ட இந்தியப் பேரரசும், மாகாண ஆட்சியும் ஏதாவது சமாதானம் கூறியாகவேண்டும் என்ற கட்டாயத்திற்கு வந்தன. அதன் பலனாக சேலத்தில் சிறிய அளவில் ஒரு பட்சார்த்த உருக்குத் தொழிற்சாலை துவங்கப்படலாம் என்று இந்தியப் பேரரசு சார்பில் கூறப்பட்டது.

நெய்வேலியில் கிடைக்கப்பெறும் நிலக்கரியைக் கொண்டுதான், இலாபகரமான முறையில் சேலம் உருக்குத் தொழிற்சாலையை தொழில்படுத்தமுடியும் என்று அமைச்சர்கள் பேசினர். எனவே, நெய்வேலி திட்டத்தின் வெற்றி தோல்வியில்தான் சேலத்தில் உருக்குத் தொழிற்சாலை நிர்மாணிக்கப்படுவதும் படாததும் இருக்கிறது என்றும், நெய்வேலி நிலக்கரிக்கும் சேலம் உருக்குத் தொழிற்சாலைக்கும் முடிபோட்டுக் காட்டி வந்தனர் அமைச்சர்கள்.

ஆனால் இப்பொழுதோ, சேலத்தில் உருக்குத் தொழிற்சாலையைத் துவங்க பேரரசு விரும்பவில்லை என்றும், கோவையில் சிறிய அளவுடைய உருக்குத் தொழிற்சாலை ஒன்றைத் துவங்க தனி நபருக்கு அனுமதி அளிக்கப்பட்டு இருப்பதாகவும் கனரகத் தொழில் அமைச்சர் அறிவித்துள்ளார். தனியார் துறையில் துவங்க இருக்கும் கோவை உருக்குத் தொழிற்சாலை, சேலம் மாவட்டத்தில் கிடைக்கப்பெறும் இரும்புக் கனிப் பொருளைப் பயன்படுத்தும் என்றும் அதே அமைச்சர் விளக்கம் தந்துள்ளார்.

உருக்குத் தொழிற்சாலை ஒன்றை சேலத்தில் துவங்க முடியாததற்கு அமைச்சர்கள் சுட்டிக்காட்டிய காரணங்கள் அனைத்தும், அதே தொழிற்சாலையைக் கோவையில் துவங்கக்கூடாது என்பதற்கும் பொருந்தும். இருந்தாலும் நெய்வேலி திட்டம் வெற்றி பெற்றால் சேலத்தில் உருக்குத் தொழிற்சாலை துவங்கப்படும் என்று அமைச்சர்கள் இறுதியில் வேண்டாவெறுப்பாக வாக்களித்திருந்தார்கள்.

ஆனால், அவ்வாறு அமைச்சர்கள் அளித்துவந்த வாக்குறுதிகளை எல்லாம் மீறி, இப்பொழுது கோவையில் இரும்புத் தொழிற்சாலை துவங்க தனி நபரை அனுமதித்திருக்கிறது இந்தியப் பேரரசு. இவ்வாறு சேலத்தை ஒதுக்கிவிட்டு, கோவையைத் தேர்ந்தெடுத்திருப்பதிலும், அதுவும் அரசாங்கமே முதலீடு செய்து துவங்குவதற்குப் பதிலாக தனி நபரை அனுமதித்திருப்பதிலும் அடங்கியுள்ள மர்மத்தை நம்மால் புரிந்துகொள்ள முடியவில்லை. இதுபற்றி சேலம் பிரமுகர் ஒருவர் எழுதியுள்ள கடிதத்தை மற்றோர் இடத்தில் வெளியிட்டுள்ளோம்.

சேலம் அன்பர், தமது கடிதத்தில் கிளப்பியுள்ள கேள்விகள் அனைத்தும் நியாயமானதேயாகும். அதற்குரிய சமாதானத்தைக் கூறவேண்டிய கடமை இந்தியப் பேரரசிற்கு இருக்கிறது.

தென்னகத்திற்கு உருக்குத் தொழிற்சாலை ஒன்று வேண்டும் என்பதும், பயன்படாது கிடக்கும் சேலம் மாவட்ட கனிப்பொருள் மக்களுக்குப் பயன்படுமாறு செய்யப்பட வேண்டும் என்பதுமேதான் நமது முக்கியக் கோரிக்கையாகும். இருந்தாலும், மூலப்பொருளைப் பெற்றிருப்பதுடன், நெய்வேலிக்கு அருகாமையிலும் இருக்கும் சேலம் மாவட்டத்தில் உருக்குத் தொழிற்சாலையைத் துவங்குவதற்கு பதிலாக, நிலக்கரியையும் சேலத்து இரும்பு மண்ணையும் இறக்குமதி செய்துதான் தொழில் நடத்த வேண்டும் என்ற நிலையில் உள்ள கோவைக்கு, உருக்குத் தொழிற்சாலை துவங்கும் வாய்ப்பை, இந்தியப் பேரரசு அளித்துள்ளதில் இருக்கும் நியாயத்தை நம்மால் ஒப்புக்கொள்ள முடியவில்லை. அதுவுமன்றி, அரசாங்கத் துறையில் உருக்குத் தொழிலைத் துவங்க முன்வராதது, தனி நபரிடம் அப்பொறுப்பை ஒப்படைத்திருக்கும் அரசாங்கத்தின் போக்கையும் நம்மால் சந்தேகிக்காமல் இருக்க முடியவில்லை.

பாகிஸ்தானில் வாழும் வட்வருக்கு டில்லி காட்டும் ஆசை

ஓடிவருவோருக்கு ரூ. 347 கோடி

செலவிடப் போவதாகத் தகவல்

புதுடில்லி, மார்ச் 25—

1957 மார்ச் 31-ந்தேதி வரையிலும் மேற்கு கிழக்கு பாகிஸ்தானிலிருந்து ஓடிவந்தவர்களின் புனர்வாழ்வுக்காக ரூ. 347 கோடிக்கு மேல் செலவிடப்படுமென்று மத்திய அகதிகள் புனரமைப்பு இலாகா வெளியிட்டுள்ள அறிக்கையிலிருந்து தெரியவருகிறது. இதில் சுமார் ரூ. 110 கோடி கிழக்கு பாகிஸ்தான் அகதிகளுக்காக மட்டும் செலவிடப்படுமாம்.

டாக்காவிலுள்ள இந்திய உதவி ஹைகமிஷனர் அலுவலகத்தில் 60,000-க்கு மேற்பட்ட மனுக்கள் வந்து சேர்ந்துள்ளனவாம்!

குடியேற்ற சர்டிபிகேட்டுகள் வழங்கப்படவேண்டும் என்று சுமார் 2 இலட்சம் பேர் மனுக்களை சமர்ப்பித்துள்ளனராம்!

கிழக்குப் பாகிஸ்தானிலிருந்து வெளியேறுபவர்களின் எண்ணிக்கை 1956-ல் 3,20,000 உச்ச அளவாக இருந்தது—அதாவது மாதம் சராசரி 26,000 பேர் வெளியேறியவண்ணம் இருந்திருக்கின்றனர் என்று செய்தி ஒன்று தரப்பட்டிருக்கிறது.

நஷ்ட ஈடு

'1957 ஜனவரி இறுதிவரையிலும் ஒன்றரை இலட்சத்திற்கு மேற்பட்ட மனுதாரர்கள் சுமார் 4½ இலட்சம் நஷ்டஈடு பெற்றுள்ளனர். இதன்றி 11,172 நஷ்டஈடு சம்மதிப்பு சர்டிபிகேட்டுகளும் வழங்கப்பட்டிருக்கின்றன என்றும் அச்செயதி கூறுகிறது.

இதோ ரூ. 24 கோடி!

1957-58-ம் ஆண்டில் மேற்கு பாகிஸ்தானிலிருந்து குடிபெயர்ந்த மக்களுக்கு நஷ்ட ஈடு தருவதற்காக ரூ. 24 கோடி ஒதுக்கப்பட்டிருக்கிறது.

ஆர்ஜிதம் செய்யப்பட்ட அகதிகள் சொத்துக்காக ரூ. 6 கோடியும் நஷ்டஈடாகத் தரப்படுமாம்.

'1956 நவம்பர் இறுதிவரையில் ஆர்ஜிதம் செய்யப்பட்ட 73,480 சொத்துக்கள் ரூ. 25,20,00,000-த்திற்கு விற்பனை செய்யப்பட்டிருக்கிறது. இதில் 18,242 சொத்துக்களை மேற்கு பாகிஸ்தான் அகதிகள் பிரதானமாக வாங்கியுள்ளனர் என்றும் தகவல் தரப்பட்டிருக்கிறது.

பஞ்சாபிலும் தாராள உதவி

1957 ஜனவர் 31-ந் தேதி இறுதிக்குள் 2,39,000 குடும்பங்களுக்கு நிரந்தர சொத்துரிமை அளிக்கப்பட்டது; இந்த நிலங்களின் மொத்த மதிப்பு ரூ. 80,44,00,000!

தொழில் திட்டங்கள்

குடிபெயர்ந்த அகதிகளின் புனர் வாழ்வுக்காக 42 மத்தியரகத் தொழில் திட்டங்களை புனருத்தாரண இலாகா அங்கீகரித்திருக்கிறது. இவைகளுக்கு மொத்தம் ரூ. 130 இலட்சம் செலவாகும்; 6,800 பேருக்கு வேலை வாய்ப்பு கிடைக்கிம்.

இதே போன்று 9 குடிசைத் தொழில் திட்டங்கள் இதுவரையில் ரூ. 12 இலட்சம் செலவில் அங்கீகரிக்கப்பட்டிருக்கின்றன; சுமார் 430 பேருக்கு இதனல் வேலை வாய்ப்பு கிடைக்கும்.

இரயில்வே ஊழியர் ஊதிய விகிதங்கள்

மேலும் உயராதென்கிறர் ரயில்வே துணை அமைச்சர்

புதுடில்லி, மார்ச் 25—

"இரயில்வே சிப்பந்திகளுக்குச் சமீபத்தில் அறிவிக்கப்பட்ட சம்பள உயர்வைத் தவிர, மேற்கொண்டு ஊழியர்களின் ஊதிய விகிதத்தை உயர்த்தும் நோக்கம் அரசாங்கத்திற்கு இல்லை" என்று மக்கள்சபையில் துணை அமைச்சர் அளகேசன் தெரிவித்தார்.

வரி விகிதங்கள் நீடிக்குமாம்!

புதுடில்லி, மார்ச் 26—

புதிய பார்லிமெண்டு வரி விகிதம் சம்பந்தமாக மேற்கொண்டு ஏதாவது முடிவு செய்யும்வரையில் இப்போது நடைமுறையிலுள்ள வரி விகிதங்கள் தொடர்ந்து அமுலிலிருந்து வர அதிகாரமளிக்கும் நிதி மசோதா மக்கள்சபையில் நிறைவேறியுள்ளது.

'அரசியல் சட்டவிதிகளை மத்திய அரசாங்கம் மீறி நடக்கிறது'

கராச்சி, மார்ச் 26—

மேற்குப் பாகிஸ்தானில் நடைபெறும் ஜனாதிபதியின் ஆட்சி ஜனநாயகத்தைக் குழி தோண்டிப் புதைப்பதற்கு ஒப்பாகும் என்றும், மத்திய அரசாங்கம் அரசியல் சட்ட விதிகளைமீறி நடக்கிறது என்றும் முஸ்லிம்லீக் தலைவர் கூறியுள்ளதாகச் செய்தி ஒன்று கூறுகிறது.

வீட்டு வாடகை அலவன்ஸ்

கன்னியாகுமரி, செங்கோட்டை அரசாங்க ஊழியர்களுக்கும் அமுலாகுமாம்

அரசாங்க ஊழியர்களுக்கு வீட்டு வாடகை அலவன்ஸ் அளிக்கும் திட்டம் கன்னியாகுமரி மாவட்டத்திலும், நெல்லை மாவட்டத்தில் செங்கோட்டை தாலூகாவிலும் 1956 நவம்பர் 1-ந்தேதி முதல் அமுலுக்கு வருமாம்.

'உலகிலேயே முதலாவதாகும்'

கம்யூனிஸ்டுகள் வெற்றி பற்றி தொழிற் கட்சித் தலைவர்

புதுடில்லி, மார்ச் 25—

"கம்யூனிஸ்டுகள் சட்டபூர்வமான கொள்கைகளை நிறைவேற்றி, பார்லிமெண்டரி ஆட்சி முறையை நடத்துவார்களானல் உலகத்திலேயே இந்தியக் கம்யூனிஸ்டுகள் தான் முதல் முறையாக அப்படிச் செய்தவர்கள் ஆவார்கள்,"

என்று, கேரளத்தில் கம்யூனிஸ்டுகள் வெற்றி பெற்றிருப்பது பற்றிக் கேட்கப்பட்ட கேள்வி ஒன்றுக்குப் பதிலளிக்கையில், இந்தியாவிற்கு வருகை தந்துள்ள பிரிட்டிஷ் தொழிற் கட்சித் தலைவர் பெவான் குறிப்பிட்டிருக்கிறர்.

தமிழ்ப் பள்ளி நிறுவ பொருளுதவினர்

பொன்னுடை போர்த்தி மகிழ்வித்தார் பிரதமர்

சிங்கப்பூர், மார்ச் 25—

மலேயாவில் சுமார் இலட்சம் டாலர் செலவில் தமிழ்ப்பள்ளி ஒன்றை ஆரம்பித்த சிதம்பரம் அவர்களுக்கு மலேயா பிரதமர் பொன்னுடைபோர்த்தி கௌரவித்துள்ளார்.

இந்தியா வழியாகக் கோவா செல்ல உரிமை

உலக நீதிமன்றத்தில் போர்ச்சுகல் வழக்கு

புதுடில்லி, மார்ச் 26—

இந்தியா வழியாக கோவா செல்வதற்கு உரிமை கோரி போர்ச்சுகல் உலக நீதிமன்றத்தில் மனு செய்திருக்கிறது; இந்தத் தாவா, எப்ரல் 15-ந்தேதியன்று விசாரணைக்கு வருமென்று மக்கள்சபையில் துணை அயல் நாட்டு அமைச்சர் கூறியுள்ளார்.

மறு பரிசீலனை செய்யப்படுமாம்

புதுடில்லி, மார்ச் 26—

சில நிறுவனங்களுக்கு சரிவர பரிசீலனை செய்யாது கடன் அனுமதிக்கப்பட்டிருப்பதாக நிதி மந்திரியே ஒப்புக்கொண்டிருப்பதாக மக்கள்சபையில், உறுப்பினர் ஒருவர் சுட்டிக்காட்டியபோது நிதி மந்திரி டி. டி. கிருஷ்ணமாச்சாரி, இந்தக் கடன் அனுமதிகள் பற்றி பரிசீலனை செய்து, உண்மை நிலைமையைக் கண்டுபிடித்துத் தெரிவிக்க ஒரு விசேட அதிகாரியை நியமிக்க உத்தேசித்திருப்பதாகத் தெரிவித்தார்.

ஏற்றுமதி நஷ்ட ஈடு நிறுவனம்

இந்திய அரசாங்கம் ஏற்படுத்தும்

புதுடில்லி, மார்ச் 26—

ஏற்றுமதிகளுக்கு ஊக்கம் அளிக்கும் நடவடிக்கையாக ஏற்றுமதி செய்பவர்களுக்குப் பாதுகாப்பு அளிக்கவும், ஏற்றுமதி நஷ்டஈடு இன்சூரன்ஸ் நிறுவனம் ஒன்று ஏற்படுத்தவும் இந்திய அரசாங்கம் முடிவு செய்துள்ளதென்றும் இதன் தலைமை நிலையம் பம்பாயில் இருக்குமென்றும் செய்தி ஒன்று தரப்பட்டிருக்கிறது.

இதன் மூலதனம் ரூ. 5 கோடியாக இருக்குமாம்.

இதுபற்றி பரிசீலனை செய்ய நியமிக்கப்பட்ட குழு சிபாரிசு செய்துள்ள நஷ்டங்களை மட்டுமே நஷ்டஈடு நிறுவனம் ஈடுசெய்யுமாம்.

பெர்முடா சந்திப்பின் எதிரொலி?

பறந்து சென்று தாக்கும் குண்டு பிரிட்டனுக்குக் கிடைக்கும்?

வாஷிங்டன், மார்ச் 26—

1,500 மைல் சென்று தாக்கக்கூடிய குண்டுகளை பிரிட்டனுக்கும் பிரான்சுக்கும் அமெரிக்கா தரக்கூடும் என்றுகருதப்படுகிறது.

பிரிட்டிஷ் பிரதமரை பெர்மூடாவில் சந்தித்துவிட்டுத் தலைநகருக்குத் திரும்பிய அமெரிக்கத் தலைவர், பாதுகாப்பு இலாகா அதிகாரிகளைக் கலந்தாலோசித்த பின், இந்தத் தகவல் தரப்பட்டிருக்கிறது.

புதிய நாணயங்கள் அமுல் எதிரொலி

பண்டங்கள் விற்பனை பற்றி ஒரு குறிப்பு

புதுடில்லி, மார்ச் 24—

61 கோடி புதிய 'நயா பைசா' நாணயங்களை தயாரிப்பதற்காக பம்பாய், அலிபூர், ஐதராபாத் நகரிலுள்ள 3 அரசாங்க நாணயச்சாலைகளிலும் வெகு துரிதமாக பணி நடைபெறுகிறதாம்.

இவ்வாண்டு ஜுன் இறுதிக்குள் 23 கோடி 'நயா பைசா'க்கள் உற்பத்தி செய்யப்படுமாம்.

25, 50 'நயா பைசா'க்கள் இவ்வாண்டின் பின்பகுதியில் புழக்கத்திற்கு வருமாம்.

ஒரு பண்டத்தை வாங்கும் போதோ அல்லது விற்கும் போதோ புதிய நாணயங்களில் தான் தொகையைச் செலுத்த வேண்டுமென்றோ, பெற்றுக் கொள்ள வேண்டுமென்றோ நிபந்தனைகள் எதுவும் கிடையாதாம்.

52 தொழிலாளர் வீடுகள் தீக்கிரை

250 பேர் வீடின்றித் தவிப்பு

கோவை, மார்ச் 25—

22—3—57 பகல் 2 மணிக்கு, சிங்காநல்லூர் வட்டத்தில் கமலா ஆலை அருகில் தொழிலாளர்களின் 52 வீடுகள் தீ விபத்தால் சாம்பலாயின. இந்த வீடுகளில் 249 பேர் குடியிருந்தனரென்றும், தீ விபத்தால் சுமார் ரூ. 15 ஆயிரம் மதிப்புள்ள பொருள்கள் சேதமாயினவென்றும் தெரிய வருகிறது.

இருக்க இடமின்றியும்— பொருள் நட்டத்தாலும் தவிக்கும் 52 குடும்பங்களுக்கும் நட்ட ஈடு கொடுத்துதவுமாறு, கோவை மாவட்ட கலெக்டருக்கு கோவை மாவட்ட ஆலைத் தொழிலாளர் சங்கம் சிங்காநல்லூர் கிளை விண்ணப்பித்திருக்கிறது.

560 பருத்திப் பொதிகள் தீயினால் அழிந்தன

சென்னை, மார்ச் 26—

560 பருத்திப் பொதிகள் சூடானிலிருந்து நான்கு நாட்களுக்கு முன்னர் சென்னை துறைமுகத்திற்கு வந்து சேர்ந்தன; நேற்று ஏற்பட்ட தீ விபத்தில் அந்தப் பருத்திப் பொதிகள் சாம்பலாகி விட்டனவாம்.

மனிதர்களிடையே நிற வேற்றுமை

உருவாக்குவதா?

போலந்து பிரதமர் மனவேதனை

''நாஜிகள் செய்ததைப் போன்று, இன்றைய உலகிலும் சில பிரிவினைகளை இயற்கைக்கு விரோதமான சில சக்திகளை உண்டாக்க முயற்சிக்கின்றன; மனிதர்களின் நிறம் காரணமாகவும், மத அடிப்படையிலும் மனிதர்களுக்குள்ளாகப் பிரிவினையை உண்டாக்கியவர்கள் இருந்தார்கள்—இன்னும் இருக்கிறார்கள்; இவர்களெல்லாம் இட்லரைப் போன்றே மறைந்து விடுவார்கள் என்றே நான் நினைக்கிறேன்'' என்று, இந்தியாவிற்கு வருகை தந்துள்ள போலந்து பிரதமர் உபசார விருந்தொன்றில் பேசுகையில் கூறியுள்ளார்.

தீங்கு விளைவிக்கிறதாம்

பயிரிடக் கூடாது என்று டில்லியின் சுற்றறிக்கை

கேசரி பருப்பை உபயோகிப்பதால் உடலுக்குத் தீங்கு ஏற்படுகிறது என்றும், எனவே, இதைப் பயிரிடக்கூடாது என்றும் இந்திய உணவு இலாகா மாநிலங்களுக்கு சுற்றறிக்கை ஒன்று அனுப்பியுள்ளதாம். இந்த அறிக்கையை சென்னை அரசாங்கம், முக்கிய அதிகாரிகளின் கவனத்திற்குக் கொண்டுவந்துள்ளதாகத் தெரிய வருகிறது.

இரண்டு பிரதமர்கள்; இரண்டு அரசியல் சட்டங்கள்

இந்திய அரசியல் விசித்திரம் குறித்து ஆச்சார்யா கிருபளானி கிண்டல்

"இந்தியாவில் இரண்டு பிரதம மந்திரிகள்—பண்டித நேருவும் பக்ஷி குலாம் முகம்மதுவும் — இருக்கிறார்கள்; இரண்டு அரசியல் சட்டங்கள் இருக்கின்றன; இந்த விசித்திரம்—இரண்டு பிரதமர்களைக் கொண்ட ஒரு நாடு—வேறெங்கிலும் இருக்கிறதா என்பது எனக்குத் தெரியவில்லை,'' என்று, ஆச்சார்யா கிருபளானி, மக்கள் சபையில் கிண்டல் செய்திருக்கிறார்!

ஜோச்சி ஆல்வா என்ற ஒரு உறுப்பினர், உடனே, 'இணைக்கப்பட்ட இங்கிலாந்தில் இரண்டு பிரதமர்கள் இருக்கிறார்கள்' என்றாராம்!

அதற்குக் கிருபளானி, 'எனது நண்பருக்கு விசாலமான அறிவு இருக்கலாம்' என்று கூறியிருக்கிறார்.

மந்திரி கிருஷ்ணமேனன், ஆஸ்திரேலியாவில் எழு பிரதம மந்திரிகள் இருக்கின்றனர்' என்று தெரிவித்திருக்கிறார். கிருபளானி அதற்கு, 'இருக்கலாம்; அவர்கள் எல்லாம் பிரதம மந்திரிகள்; ஆனால் இங்கு, நம் மாகாணங்களில் முதன் மந்திரிகள் இருக்கிறார்கள்; காஷ்மீரில் மட்டும் பிரதமர் இருக்கிறார்' என்று கூறியதும், கிருஷ்ணமேனன் வாயை மூடிக்கொண்டாராம்!

நன்றியறிவிப்பு

நாமக்கல் மக்கள் சபைத் தொகுதியில் நடைபெற்றத் தேர்தலில் தி. மு. கழகத்தின் சார்பில் போட்டியிட்ட என்னுடைய வெற்றிக்கு உழைத்த தோழர்களுக்கும், எனது வெற்றியைப் பாராட்டியும்—வாழ்த்தியும் செய்திகளனுப்பிய நண்பர்களுக்கும்—தோழர்களுக்கும் எனது உளங்கனிந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அன்பன்
ஈ. வெ. கி. சம்பத்

★

குளித்தலைத் தொகுதியில் தி. மு. கழகச் சார்பில் சென்னை சட்டமன்ற உறுப்பினராவதற்குப் போட்டியிட்ட என்னை முழு மனதோடு ஆதரித்து, வாக்களித்து, வெற்றிக்கும் பாடுபட்டு சிறப்பு செய்த பெரியோர்களுக்கும், தாய்மார்களுக்கும், கழகச் செயல் வீரர்களுக்கும் என்றென்றும் கடமைப்பட்டிருக்கிறேன் என்பதோடு, இதய நன்றியையும் தெரிவித்துக் கொண்டு, தொகுதிக்கும் நாட்டுக்கும் தொண்டுபுரிய அனைவரின் தோழமையையும் வேண்டுகிறேன்.

அன்பன்
மு. கருணாநிதி

★

சென்னை சட்டசபைத் தேர்தலில் வளவனூர் தொகுதியில் தி. மு. கழக அபேட்சகனாக நின்ற என்னை பெருவாரியான வாக்குகளால் தேர்ந்தெடுத்த வாக்காளப் பொது மக்கள் அனைவருக்கும் என் உளங்கனிந்த நன்றியை பணிவன்புடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

என் வெற்றிக்குக் காரணமாக இருந்த அனைவருக்கும் நேரில் சென்று என் நன்றிகலந்த வணக்கத்தைக் கூறமுடியா நிலையில், எதிர்பாரா விபத்தால், கடலூர் அரசாங்க மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகிறேன்; நலம் பெற்றும் வருகிறேன்.

எனது வெற்றிக்காகப் பாடுபட்ட தொகுதி கழகத் தோழர்களுக்கும்—ஆதரவாளர்களுக்கும்—பல பகுதியிலிருந்து வந்து பணியாற்றிய தோழர்களுக்கும்— பிரச்சாரத்திற்கு வந்து சிறப்பித்து உதவிய இயக்க நண்பர்களுக்கும்—எனது வெற்றியை அறிந்து மகிழ்ந்தும், பாராட்டியும், வாழ்த்துச் செய்திகள் அனுப்பிய எல்லா நண்பர்களுக்கும்—தோழர்களுக்கும் எனது உளங்கனிந்த நன்றியை பணிவன்போடு தெரிவித்துக்கொள்கிறேன்.

எனக்கு வாக்களித்துத் தேர்ந்தெடுத்த தொகுதி மக்களுக்கும், பொதுவாக தமிழ் நாட்டிற்கும் தொடர்ந்து பணிபுரிவேன் என்று உறுதி கூறுகிறேன்.

அன்பன்
ஏ. கோவிந்தசாமி

★

11—3—57-ல் நடைபெற்ற சென்னை சட்டசபைத் தேர்தலில் வேலூர் தொகுதிக்கு தி. மு. க. சார்பில் போட்டியிட்ட என்னை பெருவாரியான வாக்குகளால் வெற்றியடையச் செய்த தொகுதி பெரியோர்களுக்கும், தாய்மார்களுக்கும், தோழர்களுக்கும் என் பணிவான நன்றியையும்—வணக்கத்தையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

வெற்றியைப் பாராட்டி தந்திகள் மூலமும்—கடிதங்கள் மூலமும் வாழ்த்துச் செய்திகள் அனுப்பியவர்கள் அனைவருக்கும் இதன் மூலம் எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன், வணக்கம்.

அன்பன்
எம். பி. சாரதி

என்னுடைய வெற்றிக்காக வாக்காளர்கள் காட்டிய அன்பிற்கும்—ஆதரவிற்கும் எனது உளங்கனிந்த நன்றியும்—வணக்கமும்!

வாக்காளர்களின் நம்பிக்கைக்கு, உண்மையோடும் — உள்ளன்போடும் உழைப்பேன் என்று உறுதி கூறுகிறேன்.

பல நண்பர்கள் வெளியூர்களிலிருந்து வாழ்த்துக்கள் அனுப்பியுள்ளனர்; அவர்களுக்கும் என் நன்றி உரியதாகுக!

அன்பன்
ப. உ. சண்முகம்

★

1—3—57ல் நடைபெற்ற பொதுத் தேர்தலில் டில்லி பாராளுமன்றத்திற்கு திருவண்ணாமலைத் தொகுதிக்கு தி. மு. க. சார்பில் போட்டியிட்ட என்னை பெருவாரியான வாக்குகளால் வெற்றி பெறச் செய்த வாக்காளர்கள் அனைவருக்கும், தோழர்களுக்கும் என் நன்றியையும்—வணக்கத்தையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

நான் தமிழ் நாட்டிற்கும்—தமிழ் மக்களுக்கும்—தமிழ் மொழிக்கும் நன்மை தேட தி. மு. கழகத்தவனாக இருந்து கொண்டு பணிபுரிவேன் என்று உறுதியளிக்கிறேன்.

நான் வெற்றியடைந்ததற்கு தந்திகள் மூலமும், தபால்கள் மூலமும் வாழ்த்துக்களை அனுப்பிய பெரியோர்களுக்கும்—தோழர்களுக்கும் என் நன்றியறிதலையும்— வணக்கத்தையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

அன்பன்
இரா. தர்மலிங்கம்

★

சென்னை சட்டசபைக்கு சங்கரநயினார் கோயில் தனித் தொகுதிக்கு கழகத்தின் சார்பில் போட்டியிட்ட எனக்காக, எந்தவித பலனும் கருதாது— இயக்க வளர்ச்சியே கடமையெனக் கருதி பணியாற்றிய அன்புத் தோழர்களுக்கும், தங்கள் வாக்குகளை அளித்து ஆதரவு கொடுத்த பொதுமக்களுக்கும் என்றும் கடமைப் பட்டவனாயிருப்பேன் என்பதைத் தெரிவித்துக்கொண்டு, மேலும் கழக வளர்ச்சிக்கு ஆற்றவேண்டிய பணிகளில் எனக்குரிய பங்கை முன்நின்று நடாத்தத் தவறமாட்டேன் என்றும் உறுதி கூறுகிறேன், வணக்கம்.

அன்பன்
சி. சண்முகம்

★

11—3—57ல் நடந்த பொதுத் தேர்தலில் மாயூரம் சட்டமன்ற பொதுத் தொகுதிக்கு தி. மு. க. அபேட்சகராக நிறுத்திவைக்கப்பட்ட என்னை ஆதரித்து, அல்லும் பகலும் அயராது உழைத்த கழகத் தோழர்கள் — ஆதரவாளர்கள் அனைவருக்கும், மாற்றுக் கட்சியினரால் ஏற்பட்ட இடரைத் தாங்கிக்கொண்ட கழகத் தோழர்களுக்கும், எனக்கு வாக்களித்த வாக்காளர் பெருமக்கள் அனைவருக்கும் எனது நன்றியும்—வணக்கமும் என்றும் உரியது.

அன்பன்
பி. வெங்கடகிருஷ்ணன்

★

சென்னை சட்டசபை (மதுரை மாவட்ட) ஆத்தூர் தொகுதியில் தி. மு. கழக அபேட்சகனாகப் போட்டியிட்ட என்னையும், தி. மு. கழகத்தையும் ஆதரித்து, தங்கள் வாக்குகளை உதயசூரியன் பெட்டியில் போட்டும்—போடும்படியும் செய்த ஆத்தூர் தொகுதி வாக்காளர் பொது மக்கள் அனைவருக்கும், இடைவிடாது பாடுபட்ட கழகத் தோழர்களுக்கும் - தோழியர்களுக்கும் குறிப்பாக நெசவுத் தொழிலாளர் அனைவருக்கும் என் உளங்கனிந்த நன்றியறிதலைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

தொகுதி மக்கள் நலனுக்கும், தி. மு. கழக வளர்ச்சிக்கும் தொடர்ந்து நான் தொண்டு செய்வேன் என்பதைப் பணிவுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

அன்பன்
வி. எஸ். எஸ். மணி

★

சென்னை சட்டசபை சிவகாசித் தொகுதிக்கு தி. மு. கழக அபேட்சகனாகப் போட்டியிட்ட எனக்காக இரவு பகலெனப் பாராது உழைத்த நண்பர்கள் —கழக ஊழியர்கள்—பெரியோர்கள் — தாய்மார்கள் — மாற்றுக் கட்சித் தோழர்கள்— தொழிலதிபர்கள்—தொழிலாளர்கள் ஆகிய அனைவருக்கும் எனது இதயங்கனிந்த நன்றியையும் — வணக்கத்தையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

எனக்கு வாக்களித்து என்னை பெருமைப்படுத்திய வாக்காளர்கள் அனைவருக்கும் என் உளம் நிறைந்த நன்றியும்—வணக்கமும்.

இத்தொகுதி மக்களோடு என்றும்போல் தொடர்ந்து பணியாற்றுவேன் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

அன்பன்
ஏ. சுப்பையா, எம்.சி.

★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★

தி. மு. க. சட்டசபை-பாராளுமன்ற உறுப்பினர் தனிக் கூட்டம்

★

திராவிட முன்னேற்றக் கழகச் சார்பில் நின்று வெற்றி பெற்றுள்ள சட்டசபை—பாராளுமன்ற உறுப்பினர்களின் தனிக் கூட்டம் ஒன்று 31—3—57 ஞாயிறு காலை 10-மணிக்கு, சென்னை-இராயபுரம் 'அறிவக'த்தில், பொதுச்செயலாளர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் தலைமையில் நடைபெறும். தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள உறுப்பினர்கள் அனைவரும் வருகைதர வேண்டுகிறோம்.

—தலைமைக் கழகம் (தி. மு. க.)

★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★

கிளர்ச்சி செய்யும் நாகர்கள் தாக்குதல்?

நாட்டைக் கொளுத்தினாராம்; கொள்ளையடித்தனராம்!

இம்பால், மார்ச் 25—

மணிப்பூரிலிருந்து சுமார் 60 மைல் தூரத்திலுள்ள தாதுபி என்ற இடத்தில் ஒரு மார்வாரி கடைமீது சுமார் 30 நாகர்கள் ஆயுதங்கள் சகிதம் தாக்குதல் நடத்தியதாகவும், சுமார் 10,000 ரூபாய் பெறுமான சொத்துக்களை அவர்கள் அபகரித்துச் சென்றுவிட்டதாகவும் கூறப்பட்டிருக்கிறது.

நாகர்கள் மணிப்பூர் பிரதேசத்திற்குள் புகுந்து இவ்வாறு தாக்குதல் நடத்துவது இதுவே முதல் தடவை என்றும், கொள்ளை அடித்துவிட்டு உடனே அருகாமையிலுள்ள காடுகளுக்கு அவர்கள் ஓடிவிட்டதாகவும் தகவல் தரப்பட்டிருக்கிறது.

சென்ற சனிக்கிழமையன்று திமாப்பூருக்கு அருகிலுள்ள ஒரு காட்டை ஆயுதம் தாங்கிய நாகர்கள் கொளுத்திவிட்டதாகத் தகவல் கிடைத்திருக்கிறதாம்.

8,000 அகதிகள் வந்து விட்டனராம்!

மத்திய அமைச்சர் தகவல்

புதுடில்லி, மார்ச் 26—

பாகிஸ்தான் வசமுள்ள காஷ்மீர் பகுதியிலிருந்து 1952-56 வரை 8,000 அகதிகள் ஜம்மு—காஷ்மீர் பகுதிக்கு வந்திருப்பதாக மத்திய அமைச்சர் தத்தார், மக்கள் சபையில் கேள்வி ஒன்றுக்குப் பதிலளிக்கையில் தெரிவித்துள்ளார்.

'டிராலி பஸ் விடுவதற்கு அனுமதி வேண்டும்?

தீர்மானம் மூலம் சென்னை நகர சபை கோருகிறது

சென்னை மார்ச் 27—

சென்னை நகரில் கடற்கரை ஓரத்தில் சாந்தோமிலிருந்து பாரீஸ்கார்னர் வரையில் மின்சார டிராலி பஸ் போக்குவரத்து நடத்தப்பட வேண்டும் என்றும், அதனை நடத்த நகர சபையினருக்கு அரசாங்கம் அனுமதி வழங்க வேண்டுமென்றும் கோருகின்ற ஒரு தீர்மானம் நகரசபை கூட்டமொன்றில் நிறைவேறியிருக்கிறது.

உருக்குத் தொழிற்சாலை சேலத்திற்கா? கோவைக்கா?

தொடங்க இருக்கும் உருக்குத் தொழில் உருப்படுமா?

இலாபகரமான தொழிலாக வளம் பெறுமா?

அரசாங்கம் ஏற்காது தனியார் துறைக்கு விட்டதின் மர்மம் என்ன?

சேலம் குடிமகன் கடாவுகிறார்

சேலத்தில் கிடக்கும் இரும்புக் கனிப்பொருளைக் கொண்டு கோவையில் உருக்குத் தொழிற்சாலை ஒன்றைத் துவங்க தனியார் துறைக்கு அனுமதி கொடுத்திருப்பதாக மக்கள் சபையில், கனரகத் தொழில் அமைச்சர் அறிவித்திருந்தார். அதுபற்றி சேலம் மாவட்டத்தைச் சேர்ந்த எஸ். சத்தியநாராயணன் என்பவர் 27—3—57 'இந்து' இதழில் கடிதம் ஒன்று தீட்டியுள்ளார்; அதன் தமிழ் ஆக்கம் கீழ்தரப்பட்டு இருக்கிறது:—

"கடந்த இருபதாண்டுக் காலமாக உருக்கு இரும்புத் தொழிற்சாலை ஒன்று துவங்க வேண்டும் என சேலம் மாவட்ட மக்கள் கோரி வருகின்றனர். ஆனால், தரப்பட்டுள்ள (கோவையில் தனியார் துறையில் உருக்குத் தொழிற்சாலை துவங்க இந்தியப் பேரரசு அனுமதி தந்திருப்பது) செய்தியானது பெரும் திகைப்பளிப்பதாக இருக்கிறது.

"சேலத்தில் பரீட்சார்த்தத் தொழிற்சாலை ஒன்று துவங்கப்படுமென்று பல சந்தர்ப்பங்களில் அமைச்சர்கள் வாக்களித்து வந்துள்ளதற்கு மாறாக, அரசாங்கக் கருத்து இப்பொழுது மாறிவிட்டதற்குக் காரணம் நமக்கு விளங்கவில்லை. சேலம் மாவட்டத்து இரும்புக் கனிப்பொருளைக் கொண்டு தொழில்படக்கூடிய உருக்குத் தொழிற்சாலையை கோவையில் துவங்க வேண்டும் என்பதிலுள்ள அறிவுடைமையை நம்மால் புரிந்துகொள்ள முடியவில்லை.

"100 கல் தொலைவிலுள்ள உருக்கும் அடுப்பிற்கு, சேலத்து மலைத் தொடர்களில் கிடைக்கும் இரும்புக் கனிப்பொருளைக் கடத்திச் செல்லவேண்டும். இரும்பு மண்ணுடன் கலந்து உருக்குவதற்குத் தேவைப்படும் சுண்ணாம்பு கல்லும்-சென்னை மாகாணத்திலேயே உயர்ந்தரக சுண்ணாம்பு கல் சேலத்திலேயே கிடைப்பதினால்-சேலத்திலிருந்தே ஏற்றிச் செல்லவேண்டும்.

இரும்பை உருக்கும் அடுப்பை அமைப்பதற்குத் தேவைப்படும் பெருந்தீயைத் தாங்கும் கற்களுக்கான மாக்னசைட்-குரோமைட் பொருட்களும் சேலம் மாவட்டத்தில் மட்டுந்தான் கிடைக்கின்றன.

இரும்பை உருக்குவதற்காக பெங்காளிலும் பிகாரிலிருந்து நிலக்கரியை இறக்குமதி செய்வதும் சிக்கனச் செயலாக இருக்கமுடியாது. சேலத்தில் ஏற்படுத்துவதற்குப் பதிலாக கோவையில் தொழிற்சாலையை நிறுவுவதினால், நெய்வேலி நிலக்கரிச் சுரங்கம் வெகு தொலைவாகி விடுகிற காரணத்தால், கூடிய விரைவில் நெய்வேலி பழுப்பு நிலக்கரி, நிலக்கரியின் இடத்தைப்பெற இருப்பதின் மூலம், இலாபகரமானத் தொழிலாக இருப்பதற்கும் தடையாகிறது.

சேலம் இரும்புக் கனிப்பொருளில் கலந்திருக்கும் இரும்பு சத்து குறைவாக இருப்பதினால், அதை வெகு தொலைவுக்குக் கடத்திச் செல்லுவதில் இருக்கும் அறிவுடைமையை நம்மால் தெரிந்துகொள்ள முடியவில்லை. கிடைக்கக்கூடிய தாதுப் பொருட்களை கிடைக்கும் இடத்திலேயே பண்படுத்தவேண்டும் என்பதும், அவசியமில்லாமல் கடத்திச் செல்லக்கூடாது என்பதும் ஒருமித்த கருத்தாகும்.

சேலத்தில் உருக்குத் தொழிற்சாலை ஒன்றைத் துவங்க வேண்டும் என்ற ஏற்பாட்டைக் கைவிடக்கூடாது என அரசாங்கத்தை வற்புறுத்துகிறோம். இப்பகுதியில் குரோமைட், கொலம்பிட், டாண்டலிட்போன்ற தாதுப் பொருட்கள் கிடைக்கின்றன. உருக்குக் கருவிகளையும் உயர்ந்த அலாய்பொருளையும் உற்பத்திச் செய்ய இங்கு வசதி இருக்கிறது. கிடைக்கக்கூடிய தாதுப் பொருட்களைச் சிறந்த முறையில் பயன் படுத்துவது அரசாங்கத்திற்குள்ள திறமையைப் பொறுத்திருக்கிறது.

மேட்டூரில் அலுமினிய தொழிற்சாலை ஏற்பட்டே தீருமாம்

அதற்கான வேலைகள் துரிதமாக நடைபெற்று வருகிறதாம்!

அலுமினிய மூலப் பொருள் பற்றி அமெரிக்கா தந்த அறிக்கை சாதகமாக உள்ளதாம்

புதுடில்லி, மார்ச் 27—

மேட்டூரில் அலுமினியத் தொழிற்சாலை ஏற்படுத்துவது சம்பந்தமான வேலைகள் துரிதமாக நடைபெற்று வருகிறதாம்!

அலுமினிய மூலப் பொருள் (பாக்சைட்) அமெரிக்கா, பிரெஞ்சு, இத்தாலி ஆகிய நாடுகளுக்கும் பரிசீலனைக்கு அனுப்பப்பட்டதாம்; அமெரிக்காவிலிருந்து வந்துள்ள அறிக்கை சாதகமாக உள்ளதாம்.

இத்தகவலை மக்கள் சபைக் கூட்டத்தில் கனரகத் தொழில் அமைச்சர் மனுபாய் ஷா, கேள்வி ஒன்றுக்குப் பதிலளிக்கையில் வெளியிட்டார்.

தற்கொலைகளுக்குக் காரணம் என்ன?

ஆந்திர அமைச்சர் தகவல்

ஐதராபாத், மார்ச் 28—

ஆந்திர மாநிலத்தில் கடந்த இரண்டு ஆண்டுகளாக 2,483 பெண்களும், 2,159 ஆண்களும் தற்கொலை செய்துகொண்டனர் என்று ஆந்திர சட்டசபையில் போலீஸ் இலாகா அமைச்சர் கோபால் ரெட்டி தெரிவித்திருக்கிறார்.

வறுமையின் கொடுமை, பணத் தொல்லை, குடும்பத்தில் ஏற்பட்ட சச்சரவுகள், வேலை கிடைக்காத வேதனை, தீராத வியாதிகள், காதலினால் ஏற்பட்ட தோல்விகள் ஆகியவைகளின் காரணமாகவே இவர்கள் தற்கொலை செய்துகொண்டுள்ளனர் என்று அமைச்சர் விளக்கியுள்ளார்.

காஷ்மீரில் வாக்கெடுப்பு:

'காலாவதியான அறிவிப்பு அல்ல'

மாநிலங்கள் சபையில் மேனன்

புதுடில்லி, மார்ச் 27—

"வாக்கெடுப்பு நடத்துவது என்ற யோசனை காலாவதியாகிவிட்டது என்று நாம் கூறவில்லை; எந்தச் சூழ்நிலையிலும் வாக்கெடுப்பு நடத்துவோம் என்றும் நாம் கூறவில்லை. இந்தியாவின் துவக்ககாலப் புகார் குறித்து (பாகிஸ்தானின் ஆக்கிரமிப்பு பற்றி) பரிசீலிக்க வேண்டும் என்று கேட்டிருக்கிறோம்," என்று, மாநிலங்கள் சபையில், மந்திரி வி. கே. கிருஷ்ணமேனன் தெரிவித்திருக்கிறார்.

★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★

திராவிட முன்னேற்றக் கழக

எம்.எல்.ஏ., எம்.பி.-க்களுக்குப் பாராட்டு

திருவல்லிக்கேணி கடற்கரையில்

31-3-57 ஞாயிறு மாலை 6-மணிக்கு

★

பொதுச்செயலாளர்

இரா. நெடுஞ்செழியன்

அவர்கள் தலைமையில் நடைபெறும்.

★

அண்ணா

அவர்களும், பிறரும் கலந்துகொள்வர்.

பலர் பாராட்டுரை வழங்குவர்.

—தலைமைக் கழகம் (தி. மு. க.)

★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★

புதியரூபாய் நாணயம் வெளிவருமாம்!

அதன் உருவம் பற்றி விளக்கம்

சென்னை மார்ச் 27—

இப்போது புழக்கத்திலிருந்து வரும் ரூபாய் நாணயத்திற்குப் பதிலாக 100 'நயா பைசா' கொண்ட புதிய ரூபாய் நாணயம் கொண்டு வரப்படுமாம்!

அந்த நாணயம் மற்ற உலோகக் கலப்பில்லாமல் முழுவதும் 'நிக்கல்' உலோகத்தால் செய்யப்பட்டதாம்.

நாணயத்தின் வடிவம் 28 மில்லி மீட்டர் வட்டமாக இருக்குமாம்!

இந்த நாணயத்தில் 200 நேர் விளிம்புகள் உள்ளதாம். விளிம்பின் மையத்தில் ஒரு சிறிய பள்ளமும் அதில் முத்துக்கள்போன்ற மாலைத் தொடரும் காணப்படுமாம்.

ரூ. 100 வரை உபகாரச் சம்பளம் பெறுவோர்

ரூ. 6 அதிகம் பெறுவராம்

சென்னை, மார்ச் 26—

மார்ச் 1-ந்தேதிமுதல் மறுஉத்தரவு வரையில் ரூ. 100-க்கு மேற்படாமல் உபகாரச் சம்பளம் பெறுவோரின் தொகையில் ரூ. 6 உயர்த்தப்படும் என்று சர்க்கார் அறிவிப்பு ஒன்று கூறுகிறது.

★

'நண்பர்கள் என்ற நிலையில் அணுகுங்கள்'

பாகிஸ்தான் தலைவர்கட்கு நேரு கூறுகிறார்

வெளி விவகாரக் கொள்கை விவாதத்தைத் துவக்கிவைத்த நேரு குறிப்பிட்டதாவது:

"நாம் பாகிஸ்தானுடன், இரு நாடுகளின் பொருளாதார வளர்ச்சியைக் கருத்தில் கொண்டு, சிநேகபாவ உறவுகள் வேண்டுமென விரும்புகிறோம். ஆனால், நமது பிரதானமான — ஜீவநாடியான நலன்களைப் பறிகொடுத்துவிடுவதாகவோ, நாம் தவறு என்று கருதுகிற ஒன்றினை ஏற்றுக்

(1-ம் கலம் பார்க்க)

(5-ம் கலத் தொடர்ச்சி)

கொள்வதாகவோ இதற்குப் பொருள்கொள்ளக் கூடாது.

"பாகிஸ்தானும் வேறு சில மேலை நாடுகளும், நம்மை அச்சுறுத்த நினைக்கின்றன. அச்சுறுத்தப்படுதற்கு இந்தியா ஒன்றும் அலட்சியப்படுத்தக் கூடிய சிறு நாடு அல்ல; எனவே, இந்தப் பயமுறுத்தல்களுக்குப் பயந்துவிடமாட்டோம்,

"பாகிஸ்தான் தலைவர்களுக்கு நான் கூறவிரும்புகிறேன்—'பிரச்சினைக்குப் பரிகாரம் காண விரும்பினால், எங்களை நண்பர்கள் என்ற முறையில் அணுகுங்கள்'—என்று!

★

'மனம் திறந்து பேசினேம்'

"ஐ. நா. பாதுகாப்புச் சபைப் பிரதிநிதியான ஜாரிங்குடன் நான் மனம் திறந்து பேசினேன்; இந்திய சர்க்காரின் கருத்துக்கள் அவரிடம் தெளிவாக்கப்பட்டிருக்கின்றன. இந்தக் கருத்துக்கள் இரகசியமானவை அல்ல—ஏற்கனவே எல்லோரும் அறிந்ததுதான். இதற்குமேல் நான் எதுவும் கூறவிரும்பவில்லை"

என்று, பண்டித நேரு மாநிலங்கள் சபையில் கூறியிருக்கிறார்.

★

'ஆயுதங்கள் அனுப்பவில்லை'

"ஜம்மு—காஷ்மீரில் உள்ள விமானதளங்களைப் பயன்படுத்திக்கொள்வதுடன் ரஷ்யா, காஷ்மீருக்கு இராணுவ அதிகாரிகளையும், அணு ஆயுதங்கள் உள்ளிட்ட சகல ஆயுதங்களையும் தந்துவருவதாக, சில பத்திரிகைகளில் வெளிவந்த செய்தி முற்றிலும் தவறானது"

என்று, இரஷ்ய வெளிவிவகார இலாகா அதிகாரி ஒருவர் மறுத்துள்ளார்.

"பாகிஸ்தானில் நடைபெறும் இராணுவத் தயாரிப்புகளை மறைக்கவும், கராச்சிக்கு அமெரிக்காவிலிருந்து வந்துகொண்டிருக்கும் ஆயுத ஏற்றுமதியை அதிகப்படுத்தவும் மேற்கொள்ளப்படும் தந்திரமாகும்," என்றும் அவர் கூறியிருக்கிறார்.

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன் எம்.ஏ., அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடப்பெற்று, (24. சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம், சென்னை) வெளியிடப்பெறுகிறது. ஆசிரியர்: இரா. நெடுஞ்செழியன் எம்.ஏ.